## ★ சமாதான தீர்வில் மேலும் சில பின்னடைவு?

(கொழும்பு)
இலங்கை பிரச்னை தீர்வு தொடர்பாக உடனடியாக விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் பேச்சுக் களோ, சமாதான முயற்சி களோ ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் மிகக் குறைவாகவே காணப்படுவதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(4ம் பக்கம பார்க்க)

07-7-1991 பகுதி யாழ்ப்பாணம்

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 23 இதழ்: 146
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 7-7-1991

## நெதர்லாந்து நிறுவனம் அரசின் கண்காணிப்பில்

(கொழும்பு)
இலங்கையில் இயங்கிவரும் நெதர்லாந்து உதவி நிறுவனம் ஒன்று அரசின் பலத்த கண் காணிப்பிற்குட்படுத்தப் பட் டுள்ளது.
இந்த நிறுவனம் 1978 முதல் 83 வரையிலான காலப் பகுதியில் தீவிரவாதிகளுக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## 5 அகதிகள் முகாம் தமிழகத்தில் மூடப்பட்டன

[சென்னை]
தமிழகத்தில் 5 இலங்கை அகதிகள் முகாம்கள் மூடப் பட்டுள்ளன.
பசும்பொன்தேவர் திருமகன் மாவட்டத்தில் சிவகங்கை என்னுமிடத்தில் அமைக்கப் பட்டிருந்த 7 அகதிகள் முகாம் களில் இரண்டும், தேவகோட்

[4-ம் பக்கம் பார்க்க]

# ★ இலங்கையில் தொடரும் தமிழர் கொலைகளை கண்டித்து வாஷிங்டனில் கண்டனகூட்டம்

(வாஷிங்டன்)
**இலங்கையில் தொடர்ந்தும் மனிதஉரிமை மீறல் நடவடிக்கை இடம் பெற்று வருவதைக் கண்டித்து அண்மையில் வாஷிங்டனில் கண்டனப் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றுள்ளது. இக் கூட்டத்தில் சர்வதேச மன்னிப்புச்சபையின் அமெரிக்க கிளையும் கலந்துகொண்டு தமது கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக அண்மை உரிமை மீறலும்' என்ற தலைப் யில் வாஷிங்டனில் நடை பிலான பொதுக்கூட்டம் ஒன் பெற்ற 'இலங்கையும் மனித றில் அமெரிக்க மன்னிப்புச் சபையின் முக்கிய பிரதிநிதி திரு. ஜோன் நைட்ஸ் உரை யாற்றினர்.

வடக்கு-கிழக்கில் கடந்த யூனில் ஆரம்பித்த யுத்தத்தின் பின் ஆயிரக்கணக்கான தமி ழர்கள் கொல்லப்பட்ட தாகவும், மேலும் ஆயிரக் கணக்கானோர் காணமல் போய்விட்டதாகவும், காணு மல் போனவர்கள் கொல்லப்

[4-ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு பாதுகாப்பு தமிழ்குழுக்களுடன் சந்திப்பு

(கொழும்பு)
கொழும்பு மாநகர் பாது காப்புக் குறித்து இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க தமிழ்க் குழுக்களுடன் சந்திப்

(4-ம் பக்கம் பாரிக்க)

## இந்தியா செல்ல பெரும் கெடுபிடி

(கொழும்பு)
இந்தியா செல்லும் யாழ்ப் பாணத் தமிழர்கள் 15,000 ரூபா தரகர்களுக்குக் கொடுத்தே இந்தியாவுக்கான 'விஸா' பெறவேண்டியிருப்ப தாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலம் தொடக் கம் கொழும்பிலுள்ள இந்தி யத் தூதரகத்தில் யாழ்ப் பாணத் தமிழர்களுக்கு விஸா வழங்குவதில் தூதரக அதிகாரி கள் பாரபட்சம் காட்டிவரு கின்றனராம்.

ஆனல் தற்போதுகொழும்பி லுள்ள இந்திய தூதரகத்திற்கு வெளியில் சில தரகர்களிடம் 15 ஆயிரம் ரூபா செலுத்தி ஞல் அவர்கள் கொடுக்கும் ஒரு சீட்டுடன் தூதரகத்தினுள்

(4ம் பக்கம் பார்க்க]

## இலங்கை அரசின் உதவியுடன் ராஜீவ் கொல்லப்பட்டார்?

(புதுடில்லி)
ராஜீவ் காந்தியை இலங்கை அரசின் ஆதரவுடன் இயங்கும் போராளிக்குழு ஒன்று கொன்றிருக்கலாமென இந்திய புலனாய்வுத் துறையினர் கருது வதாக பம்பாயிலிருந்து வெளி வரும் 'த இன்டிபென்டன்' நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

ராஜீவ் கொலை தொடர்பாக நடைபெற்றுவரும் விசாரணை குறித்து 'த இன்டிபென்டன்' நாளிதழின் நிருபர் ராஜ் ஸொன்கர் எழுதிய செய்திக் கட்டுரையில் இத்தகவல் குறிப் பிடப்பட்டுள்ளது.

(3 ம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகளுக்கு காலக்கெடு நீடிப்பு

(சென்னை)
தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ்அகதிகள் தம் மைப் பதிவுசெய்வதற்கான காலக்கெடு இம்மாதம் 12ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள் ளது.

இந்த உத்தரவை மீறு வோரை நாடு கடத்துவதா இல்லையா என்பது இரு நாட்டு அரசும் பேசி முடிவுசெய்யு மெனவும் இப்பிரச்னை மாநிலப் பிரச்னை மட்டுமன்றி உலகளா விய ரீதியில் பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதொன் றென்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இதேவேளை தமிழகத்துக்கு ஆயிரக்கணக்கான 'பரா' துருப்புகள் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்து. (சி)

## ராஜீவை புலிகள் கொன்றிருக்கமாட்டார்கள்

(புதுடில்லி)
ராஜீவின் கொலையை விடு தலைப் புலிகள் செய்திருக்க மாட்டார்களென சுதந்திரக் கட்சி தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா' த ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித் துள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவிக்கையில், ராஜீவை கொலைசெய்து இந்திய மக்க ளின் எதிர்ப்பையும், அங்கு தங்கியிருக்கும்

(3ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் கூற்றுக்கு இலங்கை மறுப்பு

(கொழும்பு)
பிரிட்டிஷ் தூதர் வெளி யேற்றப்பட்டதற்கு 'மனித உரிமை மீறல்' குற்றச்சாட்டே காரணமென பிரிட்டிஷ் அரசு கூறியுள்ளதை இலங்கை மறுத் துள்ளது.

பிரிட்டிஷ் தூதர் விவகாரத் தில் இலங்கை அரசு தனக்

(4ம் பக்கம் பார்க்க)

## புதிய பிரிட்டிஷ் தூதர்

[லண்டன்]
இலங்கைக்கான புதிய பிரிட்டிஷ் தூதர் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாக பிரிட்டிஷ் வெளியுறவு அமைச் சகம் அறிவித்துள்ளது. அண் மையில் இலங்கையிலிருந்து

[4ம் பக்கம் பார்க்க]

## புலிகள், அகதிகளுக்கு எதிராக இலங்கை பிரதிநிதி பிரசாரம்

(சென்னை)
தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கும், விடு தலைப் புலிகளுக்கும் எதிராக பிரசாரவேலையில் ஈடுபட இலங்கை அரசு கிழக்கு, மாகாண அரசியல் வாதியான ஜனுப் மசூர்மௌலானவை தமிழகத்திற்கு அனுப்பியுள் ளது.

ஜனுப் மசூர் மௌலான சென்னையிலுள்ள உதவி இந்திய தூதரகத்தின் தகவல் துறை செயலாளராக நியமிக் கப்பட்டு மே மாதம் 16ம் திகதி தமிழகம்சென்றுள்ளார்.

(3ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு தாக்குதல்; புதிய திட்டம் தயாரிப்பு

[கொழும்பு]
வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இரா ணுவ நடவடிக்கைக்கு புதிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தரன் ஸ்ரூடியோ

அவசரமாக பாஸ்போட் அடையாள அட்டைப்படங்கள், றபர்சீல்கள், விளம்பர போட், பிளாஸ்ரிச் போட் முதலியன பெறுவதற்கு தரன் படப்பிடிப்பாளர் 189, மின் சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4896)

### யந்திரம்

செவ்வாய் தோஷமுள்ளவர்களுக்கு ஆடி மாதத்தில் ஜெபிக்கவேண்டிய மங்கள சண்டி யந்திரம். விவாகத் தடையை நீக்கி இல்வாழ்வை தரும்.சாதகத்துடன் யூலை 10ம் திகதிக்கு முன்வரவும். விவாகம் நடைபெறுவிட்டால்பணம் திரும்பபெற உத்தரவாதம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, (அரசடிச்சந்தி) நல்லூர். (சி-4928)

### "மீரா" நாவல்கள்

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பிறந்தநாள், விசேட தினங்களில் பரிசளிக்கக்கூடியவை. சிறுவர்களுக்கு "இராவணன் கோட்டை", இனவிடு தலையைமையமாக "சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள்", மற்றும் நெஞ்சைத் தொடும் பத்து சமூக நாவல்களும் விற்பனையாகின்றது. (சி 4944)

### மில்க்வைற் சலவைத் தூள்

ஆற்றல் மிக்க சக்தி வாய்ந்த நுரை வளம் கூடிய "மில்க்வைற் சலவைத் தூள்" 50 கிராம் பக்கற் ரூபா 6/- மட்டுமே. 100 வெற்றுப் பக்கற் அனுப்பி ஒரு அழகிய லேஞ்சி அன்பளிப்பாகப் பெறுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். [ஏ-1427]

### ஆங்கில வகுப்புகள்

1. Spoken English (புதிய முறையில்). 2. ஆண்டு 11, 10, 9 க்கு சிறந்தமுறையில் ஆங்கிலம் கற்பிக்கப்படும். 3. A/L படித்தவர்களுக்கு விசேஷ ஆங்கிலம். உடன் விண்ணப்பிக்கவும்; குறைந்த கட்டணம் ஆசிரியர்: T. செல்லப்பா B. A. (Lond.), 25/4, B. M. C. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-4952)


# உ.அ. அதிபர்பிரிவு மட்டத்தில் 3ஆண்டு அபிவிருத்தி திட்டம்

(சித்தன்கேணி)

நாடெங்கிலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் மூன்றுண்டு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் வருடமொன்றுக்கு எழுபதுலட்சம் ரூபா வீதம் மூன்றுண்டுக்கும் 210 லட்சம் ரூபாவுக்கான அபிவிருத்தித் திட்டம்அந்தந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்திலேயே தயாரிக்கப்படவுள்ளது.

இத்திட்டங்களை தயாரிக்கும் போது உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலவளங்கள், மனித வலு ஆகியவற்றின் உச்ச அளவைப் பயன்படுத்தி உற்பத்தி அதிகரிப்பு, வேலை வாய்ப்பு என்பவற்றை நோக்கமாகக் கொண்ட திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து இந்த மூன்றுண்டுஅபிவிருத்திதிட்டத்தை தயாரிக்குமாறு கொள்கைத் திட்டமிடல் செயற்படுத்து அமைச்சின் செயலாளர் டாக்டர் லொயிட் பெர்ணுண்டோ சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் சுற்றுநிருபத்தின் மூலம் தெரியப்படுத்தியுள்ளார். (137)

## மருந்து தட்டுப்பாடு

(அச்சுவேலி)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் நோயாளருக்கு சிகிச்சை அளிப்பதற்கு அத்தியாவசிய மருந்துவகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கூறப்படுகின்றது.

தற்பொழுது 24 மணி நேரமும் வைத்தியசாலை செயற்படுகின்ற போதிலும் முக்கிய மருந்துவகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளர்கள் பாதிப்படைகின்றனர். [74]

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலியிலிருந்து கட்டுவன் பகுதியை நோக்கி கடந்த 4-ம் தேதி இரவு 9-00 மணிக்குப் பின்னர் படையினர் கடும் ஷெல்த்தாக்குதல்களை நடத்தினர்.

ஒவ்வொரு மணித்தியாலத்திற்கொரு தடவை இச்ஷெல் தாக்குதல் இடம்பெற்றது.

இதேவேளை நேற்றுமுன்தினமிரவு ஆனையிறவிலிருந்தும் தட்டுவன்கொட்டி. உமையாள்புரம் நோக்கி படையினர் ஷெல்தாக்குதலை மேற்கொண்டனர். (56)

## 'சாளரம்'

[சாளரம்]

'சாளரம்' இரண்டாவது இதழ் இன்று வெளிவருகிறது.

'மாதாந்த இளையோர் இதழ்ச் சுவடி, என்னும் மகுடத்துடன் இச்சஞ்சிகையின் முதலாவது இதழ், கடந்த மாதம் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

## கமநலசேவை உத்தியோகத்தர் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

[மானிப்பாய்]

வடக்கு கிழக்கு மாகாண கமநல சேவை திணைக்களத்தில் பெரும்பாக உத்தியோகத்தர்பதவிதரம் II [இரண்டு] வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன,

விண்ணப்பதாரர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாகவோ அல்லது க. பொ. த. சாதாரண தர சித்தியுடன் பேராதனை வவுனியா விவசாயக் கல்லூரிகளில் ஒன்றில் டிப்பிளோமா பட்டத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும். இதற்கான வயதெல்லை 35 ஆகும். மேலும் விபரங்களை நல்லூர் கமநல சேவைக் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி இம்மாதம் 10 ஆம் தேதியாகும். [71]

## இராசி பலன்

07- 07- 1991

ஞாயிற்றுக்கிழமை

தசமி பி.ப. 12-46 வரை.

பரணி மு.இ. 10-59 வரை,

இராகுகாலம் மாலை 4-28 முதல் 5-58 வரை.

சுபநேரம் காலை 8-38முதல் 10-28 வரை.

மேஷம்: வித்தை விருத்தி, அவசர பயணம், குடும்ப சந்தோஷம்.

இடபம்: மனமக்யகம், போட்டி உருவாதல், சகோதர பகை.

மிதுனம்: கூடிப்பேசுதல், முதலீடுசெய்தல், காரியசித்தி.

கடகம்: வாகனசுகம், தொழில்சிறப்பு, பெண்வகை நட்பு.

சிங்கம்: தர்மசிந்தனை, தொழில்பிணக்கு, காரியபலிதம்.

கன்னி: விரக்திநிலை, மனைவி வழித்துன்பம், வைத்திய செலவு.

துலாம்; சுபகாரியசெலவு, வாக்குவன்மை, அயலவர் நேசம்.

விருச்சிகம்: புறங்கூறுதல், பெரியோர்ஆசி, பாராட்டு.

தனுசு: அமைதிகுன்றல், உடல்உபாதை, குடும்பகவலை.

மகரம்: விபரீத எண்ணம், புறம்போக்கு, அலைச்சல்மிகுதி.

கும்பம்: தெய்வதரிசனம், தொழில்சிறப்பு, அந்நிய வாசம.

மீனம்: குடும்ப பிணக்கு, பணக்கஷ்டம், அகலா போஜனம்.

- ஜோஸ்யர்

## இறுதிப் போட்டி

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இம்மாதம் 11-ம் திகதி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணியும் பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அணியும் மோதவிருக்கின்றன. [72]

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நிலஅளவைத் திணைக்களத்தின் அளவையியலும் மட்டமாக்கலிலும் நில அளவையாளர் அதிபதியின் உத்தரவுப் பத்திரத்தை வழங்குவதற்கான வருடாந்தப் பரீட்சை 1991 எழுத்து, செய்முறை ஆகிய இருபகுதிகளாக நடாத்தப்படவிருக்கிறது.

எழுத்துப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 23ம் திகதியும் செய்முறைப் பரீட்சை செப்டெம்பர் மாதம் 23ம் திகதியும் இடம்பெறவிருக்கிறது.

இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 19ம் திகதிக்கு முன்பாக அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (153)

## ரத்துச் செய்யப்பட்ட 5லட்சம் அடையாள அட்டைகள்

(கொழும்பு)

ஐந்து லட்சம் அடையாள அட்டைகள் ரத்துச்செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

1972, 73-ம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் இரத்துச் செய்யப்படும் என்று ஆட் பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ் அட்டைகளுக்குப் பதிலாக புதியஅடையாளஅட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

## தென்மராட்சி உ. அ. அதிபர் பிரிவு இ. அ. சங்கப் பிரதிநிதிகள் கிராம அபிவிருத்தி சுற்றுலா

[கொழும்புத்துறை]

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், 'கிராம அபிவிருத்திச் சுற்றுலா'வை மேற்கொண்டு இந்தியா செல்ல உள்ளனர்.

இந்தியாவின் கிராம அபிவிருத்தி, சுயதொழில் வேலை வாய்ப்பு, மக்கள், கிராமங்கள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு, சங்க அங்கத்தவர்களை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் இச்சுற்றுலா இடம்பெற உள்ளது.

இச்சுற்றுலாவுக்கான சகல ஏற்பாடுகளையும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வை. இராஜராஜேஸ்வரன் மேற்கொண்டு வருகிறுர்.

ஆகஸ்ட் மாத இறுதியில் இச்சுற்றுலா மேற்கொள்ளப் படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றுலாவில் பங்குபற்ற விரும்பும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளின் முழுப் பெயர், விபரங்கள் அடங்கிய பட்டியலைத் தயாரித்து, இம்மாதம் 27ந் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (154)

## பாடும்மீன் வெற்றி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தால் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் பாம்டுமீன்கழகம் முதல்சுற்றில் வெற்றி பெற்றுள்ளது.

பாடும்மீன் கழகத்துக்கும், கிறீன்பீல்ட் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 90 நிமிட ஆட்டத்தில் பாடுமீன் கழகம் 85-வது நிமிடத்தின் பின்பு அடுத்தடுத்து மூன்று கோல்களைப்போட்டு வெற்றி பெற்றது.

ஆட்டம் தொடங்கி இறுதி வரை கிறீன்பீல்ட் கழகம் மிக சாதுரியமாக விளையாடிய போதிலும் இறுதிநேரத்தில் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

பாஷையூர் சென், அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. நாகேந்திரம் மத்தியஸ்தம் வகித்தார். (வி)

## கூட்டம்

(கொழும்புத்துறை)

திருவாசகம் ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. [154]

## சோழன் முதலிடம்

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

மூன்று இல்லங்களுக்கிடையில் இடம்பெற்ற இப்போட்டியில் சோழன் இல்லம் முதல் இடத்தையும், சேரன் இல்லம் இரண்டாம் இடத்தையும், பாண்டியன் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன. (71)

## வருடாந்த கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை 8ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் கல்லூரி அதிபர் திருமதி எஸ். மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (72)

## நியமனம்

[மன்னர்]

மன்னர் நிருவாக மாவட்டத்திற்கு புதிய அரசாங்க அதிபராக திரு. கே. கணேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்பு மன்னர் மாவட்ட கமநலசேவைகள் உதவி ஆணையாளராக கடமையாற்றியவராவர். (153)


DHL... DHL... DHL... DHL...

உலகம் முழுவதுக்குமான துரித தபால் சேவை

யாழ்ப்பாண நகரத்தில் உங்கள் கடிதங்களை பாதுகாப்புடன் ஒப்படைக்க

DHL International

C/o, Cosmos Marketing Services,

120, K. K .S, Road, Jaffna.

DHL WORLDWIDE EXPRESS

(ஏ-1428)

# கோடையிலும் வற்றாத குளங்கள்

தமிழீழ வயல்வெளிப் பிரதேசத்திலுள்ள குளங்கள், கிணறுகள் அநேகமானவை ஒரே ஆழம் உடையனவாகக் காணப்படுகின்றன. அண்ணளவாகக் கிணற்றின் மட்டம் 10 அடி தொடக்கம் 15 அடி வரையிலேயே கணிக்கக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறாக இருப்பினும் கோடை காலங்களில கிணறுகளின் தண்ணீர் மட்டம் குறையாத நிலையிலுள்ளன. குளங்களோ வற்றினாலும் ஊறுவது இல்லை. காரணம் - குளங்களில் உள்ள ஊற்றுக்கள் தூர்ந்துபோய்க் காணப்படுவதே எனப் பார்வையாளர்கள் கருதுகின்றனர். இந்த நிலைமையை நீக்குவதற்கு குளங்களின் நடுப்பகுதியில் நீர்ச்சுனையைக் கண்டறிந்து குழாய்க் கிணறு அமைப்போமாயின் பூமிக்கு அடியில் உள்ள நீர் மேலே வந்து அயலில் உள்ள கிணறுகளின் நீர்மட்டமளவிற்கு குளங்களிலும் வந்து தேங்கி நிற்கும்நிலை ஏற்படும். இதனால் அதிகம் வரட்சியான நிலையிலும் வற்றாத நிலையில் உள்ள குளங்களைப் பெறலாம்.

நிலத்தடி நீர் கோடை காலத்தில் எமக்கு குழாய்க் கிணறுகள் வழியாக கூடியளவில் கிடைக்கும். அதேநேரத்தில் மாரிகாலத்தில் வெள்ள நீர் கடலில் போய்ச் சேராமல் பூமிக்கடியில் சென்று தேங்கி இருப்பதற்கும் இக் குழாய்க் கிணறுகள் உதவியளிக்கின்றன. இந்த முறையை, விவசாயப் பகுதியினர் உடனடியாகக் கைக்கொண்டு ஆழமான எல்லாக் குளங்களிலும் ஒன்றல்ல, இரண்டு அல்லது மூன்று குழாய்க் கிணறுகள் வீதம் அமைத்து பூமிக்கடியில் உள்ள நீரைக் குளத்தில் தேக்கி நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தும் அதேவேளையில் குளத்துநீர் சுற்றுடல் நிலங்களின் ஈரலிப்புத் தன்மையை ஏற்படுத்தி வரட்சித்தன்மையை நீக்கும், இதனால் வயல்களில் உள்ள கிணறுகள் கூடிய ஊற்றுத்தன்மையை உண்டாக்கும். இதனால் அயலில் உள்ள வான்பயிர்கள் செழிப்பாக வளரும் வாய்ப்பும் ஏற்படும்.

வற்றாத குளத்து நீருக்கும் வயல் மேற்பரப்பிற்கும் உள்ள தூரம் குறுகி 4 அடி அல்லது 5 அடி வரையிலேயே காணப்படும். எனவே எரிபொருளையோ மின்சாரத்தையோ நம்பியிராமல் குளக்கரையில் அகலமான வாய்க்கால்கள் அமைத்து சீலாப்பட்டை முறையில் நீரை இறைத்து நீர்ப்பாசனம் செய்தால் எமது பிரதேசத்தில் பெரும்போகமென்ன, சிறுபோக நெற்செய்கையைக்கூட உற்பத்தி செய்யலாம். குள எல்லைகளில் தோட்டப் பயிர்களும், சிறு தானியப்பயிர்களும் கோடை காலங்களில் பயிரிடலாம்.

கோடைகாலங்களில் குளங்கள் வற்றிப்போவதால் நன்னீர் மீன் இனங்கள்கூட அருகிப்போகும் நிலையில் உள்ளன. இவற்றையும் பாதுகாத்துப் பெருக்குவதன் மூலம் எமது மீன் தேவையும் பூர்த்தியாக்கப்பட மேற்குறிப்பிட்ட திட்டம் இன்றியமையாததாகும். மேலும் பசுமையான புல் இனங்கள், பறவை இனங்கள், தாமரைப்பூ இனங்களும் அழிந்துகொண்டே இருக்கின்றன. இவற்றையும் தடுத்து நிறுத்துமுகமாக ஆழமான எல்லாக் குளங்களிலும் குழாய்க் கிணறுகள் அமைத்து தமிழீழ மண்வளத்தைப் பெருக்குவோமாக.

**மாணிக்கம் கணேஷ்**

## கலந்துரையாடல்

(வேலணை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை சங்கத்திற்குட்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவு குழுக்களுக்கிடையிலான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு செஞ்சிலுவைச் சங்கமண்டபத்தில் தலைவர் திரு நச்சினார்கினியன் தலைமையில் நடைபெறும். [75]

★

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான, தங்கள் குறைபாடுகளை ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இடம்பெயர்ந்த காரைநகர் அகதிகள் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

★

(யாழ்ப்பாணம்)

ஒய்வூதியம் பெறுவதில் ஏற்படும் சிக்கல், உலர் உணவு தொடர்ந்து பெறமுயற்சித்தல் மரணக்கொடுப்பனவு என்பன பற்றி வலி வடக்கு ஒய்வூதிய சங்கத்தின் கலந்துரையாடல் ஒன்று இன்று 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மல்லாகம் இந்துமகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

★

[சித்தன்கேணி]

தமிழ்ப் பேசும் கிராம சேவை அலுவலர் சங்கத்தின் செயற்குழு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. ராஜனை கோண்டாவிலிலுள்ள மாவட்டச்செயலகத்தில் இம்மாதம் 9-ம் திகதி செவ்வாய் காலை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். [137]

## சார்க் மாநாடு

[கொழும்பு]

தெற்காசிய பிராந்திய நாடுகளின் அமைப்பான 'சார்க்' மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 7ம் திகதி முதல் 9ம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது. [க]

## தமிழ் அகதிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, தமிழகத்தில் சில ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகள் இலங்கை அரசுக்குச் சார்பாகவும், தமிழ் அகதிகளுக்கும், புலிகளுக்கும் எதிராகவும் பிரசார வேலையில் ஈடுபட்டு வருகின்றனவாம். இதன் மூலம் அங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு எதிரான வெறுப்பைத் தோற்றுவிக்க இப்பத்திரிகைகள் முயல்வதாகவும் லண்டன் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, ராஜீவ் கொலையைப் புலிகளோ அல்லது அங்கு தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளோ செய்ததற்கான ஆதாரம் எதுவும் இந்தியப் புலனாய்வுத் துறையினருக்குக் கிடைக்கவில்லை என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (சி)

## இலங்கை அரசு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் மேலும் குறிப்பிடுகையில், ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதாகச் செய்தி வந்ததும், அது புலிகளின் வேலை தான் எனக் கூறப்பட்டது. ஏனெனில் புலிகளிடம்தான் தற்கொலைப் படைத் தாக்குதல் பிரிவு உள்ளதென்றும் இதற்குக் காரணம் கூறப்பட்டது.

எனினும் புலனாய்வுத்துறையினரின் விசாரணைகளின் கோணம் வேறு விதமாகவும் அமைந்ததால், புலிகள்தான் இதனைச் செய்தார்கள் என்பதற்கான போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

ராஜீவின் கொலை, வெளிச்சக்தி உதவியுடன் நடைபெற்றிருக்கும் என மத்திய புலனாய்வுத்துறையினர் கருதுகின்றனர். மேலும் இக்கொலையை மற்றொரு தமிழ்க் குழு, (இலங்கை அரசின் ஆதரவு பெற்ற) செய்திருக்கலாம் எனவும் கருதுகிறார்கள்.

ராஜீவை கடந்த மார்ச் மாதம் 5ந் திகதி புலிகள் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதன் மூலம், இரு தரப்பு உறவும் நன்கு பலம் அடைந்து விட்டதாகவும், இதனால் ராஜீவ் ஆட்சிக்கு வந்தால், புலிகளின் கையே ஓங்கிவிடும் என்றும் தமிழ்க் குழுக்கள் கருதி. இக்கொலையைச் செய்திருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும் அக்கட்டுரை மேலும் தெரிவிக்கிறது. (சி)

# 6 நிருபர்களுக்கு மரண தண்டனை

(குவைத்நகர்)

குவைத்தில் பிரபல பத்திரிகைகளின் 6 நிருபர்களுக்கு குவைத் அரசு மரணதண்டனை விதித்துள்ளது. ஈராக்குடன் இணைந்து செயற்பட்டதாக கூறியே இவர்களுக்கு மரண தண்டனை விதித்துள்ளது.

குவைத்தின் இச்செயலை ஐ. நா. செயலாளரும், ஐ நா. பத்திரிகையாளர் சங்கமும், சர்வதேச மன்னிப்புச்சபையும் வன்மையாககண்டித்துள்ளன.

கடந்த மே 24ம் திகதிமுதல் இதுவரை 38பேருக்கு குவைத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (சி)

# இலங்கை தமிழ் இளைஞர்கள் சென்னை நகைக்கடையில் துணிகரக்கொள்ளை!

(சென்னை)

சென்னை குரோம்பேட்டையில் நகைக் கடையொன்றில் மூன்று இலங்கைத்தமிழ் இளைஞர்கள் துப்பாக்கி முனையில் துணிகர கொள்ளையை நடாத்தியுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சுகன் ஜுவலர்ஸ் என்ற நகைக் கடையைப் பூட்டிக் கொண்டிருக்கும்போது மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் துப்பாக்கி முனையில் கடைக்குள் நுழைந்து பெருமளவு நகை, பணத்தை கொள்ளையடித்தனராம்.

வந்தவேகத்தில் காரியம் முடிந்ததும் மோட்டார் சைக்கிளில் மூவரும் தப்பிவிட்டனராம். (சி)

## பண்ருட்டி விவகாரம்

(சென்னை)

தமிழக சட்டசபையின் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரனும், சுயேட்சை உறுப்பினர் திரு. ஆர். தாமரைக்கனியும் 3 நாட்களுக்குச் சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக்கூடாதுஎனச் சபைத் தலைவர் உத்தரவிட்டுள்ளார். [க]

# "பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவரின் நல்வாழ்விற்கு வழிகாட்ட வேண்டும்"

### - யாழ். அரசாங்க அதிபர்

(மானிப்பாய்]

''மாணவர்களின் எதிர்கால நல்வாழ்விற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும்தான் வழிகாட்டியாக திகழ வேண்டும்'' என்று யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 80-வது ஆண்டு ஸ்தாபகர் தினம், பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் சேசவராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''மாணவர்கள் எதிர் காலத்தில் நற்பிரஜைகளாக திகழ வேண்டும். இதற்கு கல்லூரிகள் உந்துசக்தியாக இருத்தல் அவசியமாகும்.

எனது தாயான இக்கல்லூரியின் நிறுவுனர் நாகு [illegible] என்னை அழைத்தமை [illegible] நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.. இன்று என்னை இந்த நிலைக்கு உயர்த்திய பெருமை இந்தக் கல்லூரியையே சாரும்''.

ஆசிரியர் தம்பிப்பிள்ளை, செல்வி சுப்பையா ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள். விழா இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (71)

## இன்று

(யாழ்ப்பாணம்]

பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்திலுள்ள பாலர் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி இன்று 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் திரு. ஆ. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்ச்சியில் யாழ்ப்பாண கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகவும், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை நிர்வாக முகாமையாளர் திரு. வி. ரி. சிவலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற, தடகளப் போட்டியின் இறுதிநாள் நிகழ்ச்சிகளும், பரிசளிப்பு வைபவமும் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கு பிரதம அதிதியாக யாழ். அரச அதிபர் திரு, கா. மாணிக்கவாசகரும், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதனும், கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை உடற்கல்வி விரிவிரையாளரும், யாழ். உதை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவருமான திரு. கே. யதுகுலசிங் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. செ. இ. நித்தியராஜ் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்துக்கு, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. சி. அண்ணாத்துரை சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (வி)

ஃ ஃ ஃ

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறையினரும், யாழ். கல்வித் திணைக்கழமும் சேர்ந்து நடத்தும் தமிழ் வள ஆய்வுக் கருத்தரங்கு இன்று 7-ம் திகதி யாழ். பல்கலைக் கழகத்தில் மு.ப. 9மணி — பி.ப. 4-30 வரை நடைபெறும்.

இக்கருத்தரங்கிற்கு கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமை தாங்குவார்.

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

மேற்படி கருத்தரங்கில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் க. சிவத்தம்பி, பேராசிரியர் வி. ஆறுமுகம், கலாநிதி சு. சுஜீந்திரராஜா ஆகியோரும் கலந்து கொள்வதுடன், திணைக்கழ சார்பில் தமிழ் மொழி சேவைக்கால ஆலோசகர்கள் தமிழ் வள ஆளணியினர், பிரதம கல்வி அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், தமிழ் வளமுடைய பண்டிதர்கள், வித்துவான்கள் போன்றோரும் பங்கு கொண்டு கருத்துரை வழங்குவர்.

## வ. பி. போ. ச. ஊழியர் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் கடமையாற்றும் நான்கு ஊழியர்கள் வவுனியா, மன்னார் சாலைகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்கள்.

எஸ். கனகரத்தினம், எ[illegible] ஜீவானந்தம் ஆகியோர் வவுனியா சாலைக்கும் எஸ். தேவநேசன், ஏ, சி. மகேந்திரன் ஆகியோர் மன்னார் சாலைக்கும் அடுத்தமாதம் முதலாம திகதி தொடக்கம் இடமாற்றப்பட்டுள்ளார்கள்.

இதற்கு முன்னரும் பல ஊழியர்கள் மன்னார் வவுனியாவுக்கு இடமாற்றப்பட்டும் அங்கு இராணுவ நடவடிக்கை காரணமாக இவர்கள் கடமைகளை பொறுப்பேற்க செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [க]

## அடையாளம் காணப்பட்டது

[சென்னை]

தமிழகம் செங்கை அண்ணா மாவட்டம் லட்சுமிபுரம் கிராமத்தில் குளமொன்றிலிருந்து கடந்த செவ்வாய்க் கிழமை கண்டெடுக்கப்பட்ட, சடலம் யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த முருகமூர்த்தி [வயது-32] என அடையாளம் காணப்பட்டுள்ளது.

குளத்தூரில் அஞ்சுகம் நகரில் இவர் தனது மனைவி நாகேஸ்வரி, இரு பிள்ளைகளுடனும் சில மாதங்களாக வசித்து வந்தாராம். (சி]

## உணவு முத்திரை

(மானிப்பாய்)

மானிப்பாய் பகுதி பாடசாலை மாணவர்களுக்கு மார்ச் ஏப்ரல் மாதத்திற்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## ராஜீவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அகதிகளுக்கு நெருக்கடியையும் ஏற்படுத்தப் புலிகள் முயன்றிருக்க மாட்டார்கள்.

மேலும் தமிழகத்தில் புலிகளின் ஆதிக்கம் அதிகரித்து இருப்பதாகக் கூறப்பட்டுவந்ததால், தமிழகத்தை அவர்கள் ராஜீவ் கொலைக்குத் தளமாகப் பயன்படுத்தி இருப்பார்களா என்பதும் பலத்த சந்தேகத்திற்குரியதே என்றார். (சி)

## ★ மோதல்களை கைவிட்டு அரசு - புலிகள் நிபந்தனையின்றி

# பேச்சு நடத்த வேண்டும்!

[கொழும்பு]

மோதல்களை கைவிட்டு நிபந்தனைகளின்றி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு சிறிலங்கா அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் கிறிஸ்தவ தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை தேசிய கிறிஸ்தவ சபையின் தலைவர்கள் கொழும்பில் விடுத்த அறிக்கையொன்றின் மூலம் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இருதரப்பினரும் முன் நிபந்தனைகள் எதுவுமின்றி யுத்தத்தைக் கைவிட்டு பேச்சுவார்த்தைகளை நடத்தி தொடரும் இனப்பிரச்சனைக்கு நல்லதொரு தீர்வுகாண முன்வரவேண்டும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொண்டர் ஆசிரியர் மாபெரும் ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரிய சங்கத்தினர் நிரந்தர நியமனம் மற்றும் சில கோரிக்கைகளை முன்வைத்து நாளை 8-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதி. பட்டப்படிப்புகள் கல்லூரியிலிருந்து ஊர்வலம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இவ்வூர்வலத்தினர் நிழல்நிர்வாக கல்விப் பொறுப்பாளர், செஞ்சிலுவைச்சங்கம், அரச அதிபர், கல்வித் திணைக்களம் ஆகிய அலுவலகங்களுக்கு ஊர்வலமாகச் சென்று மகஜர் கையளிக்கவுள்ளனர்.

சகல தொண்டர் ஆசிரியர்களையும் இவ்வூர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (பூ)

### புதிய பிரிட்டிஷ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்றப்பட்ட திரு கிளாஸ்ரோனின் இடத்திற்கே புதியவர் நியமிக்கப்படவுள்ளார்.

## மலையக மக்கள் முன்னணி மீது பலத்த கண்காணிப்பு

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணி கட்சிமீதுபலத்த கண்காணிப்பு போடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலா ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு கூட்டுப்படை தலைமையக குண்டுவெடிப்பிற்கு காரணமான வரதன் என்பவருக்கு இக்கட்சி தலைவா கொல்லையில் மறைவிடம் வழங்கியதாகவும் இதையடுத்தே இவர்கள் மீது கண்காணிப்பு போடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கட்சியின் பல உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதும் தெரிந்தே. (சி)

## ★ கடந்த இரண்டரை வருடங்களாக

# குற்றப்பத்திரம் தாக்கலின்றி

## பூஸாவில் வாடும் ஜே. வி. பி. யினர்

(கொழும்பு]

காலி மாவட்டத்திலுள்ள பூஸா தடுப்பு முகாமில் 1,800 ஜே. வி. பி. சந்தேக நபர்கள் கடந்த 2½ வருடங்களாக எவ்வித குற்றச்சாட்டுகளும் இதுவரை தாக்கல் செய்யப்படாது தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நிலையினால் இவர்களுடைய குடும்பங்கள் உழைப்பு இல்லாமல் மிகவும் கஷ்டப்படுவதாகவும் கூறப்படுகிறது. தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு போதியளவு சுகாதார வசதிகள் வழங்கப்படுவதில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. இங்குள்ள ஒரு கிணற்றில் ஒரு நாளுக்கு 500 பேர் குளிப்பதற்கு நிற்பதாக தடுப்பு முகாமிலுள்ளவர்கள் கூறுகிறார்கள்.

கடந்தவாரம் பூஸா தடுப்பு முகாமுக்கு சென்ற பி. பி. ஸி நிருபரிடம் தடுப்பு முகாமிலுள்ள சந்தேகநபர்கள் (பெண்களும்) தமக்குஇழைக்கப்படும் அநீதிகள் பற்றி தெரிவித்தார்கள். (மா]

## சுவீடன்பொறியியலாளர்கள் துணிகரமாக தப்பினர்

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட 2 சுவீடன் பொறியியலாளர் தீவிரவாதிகளின் காவலிலிருந்து நேற்றுமுன்தினம் துணிகரமாகத் தப்பி ஸ்ரீநகருக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்களுக்குக் காவலாக இருந்தவர்கள் ஆழ்ந்த நித்திரையிலிருந்தபோது யன்னல் வழியாக வெளியே குதித்து நெடுந்தூரம் நடந்து நேற்று அதிகாலை பேஜ்நகரை அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. பேஜ்பகரா பொலிசாரின் துணையுடன் ஸ்ரீநகருக்கு இவர்கள் வந்து சேர்ந்துள்ளார்கள்.

இந்த இரண்டு சுவீடன் எனஜினியர்களும் மார்ச் மாதம் 31-ஆம் திகதி காஷ்மீர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (மா)

## சோனியா விருது பெற்றார்

(புதுடில்லி)

அமரர் ராஜீவ் காந்தி இந்தியாவின் மிகப்பெரிய விருதான "பாரதரத்ன" விருதினால் நேற்று கௌரவிக்கப்பட்டார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி இந்த விருதினைக் குடியரசுத் தலைவர் திரு. வெங்கட்ராமனிடம் இருந்து பெற்றுக் கொண்டார். (மா)

### கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்றை நடாத்தியுள்ளார்.

கொழும்பில் கைது செய்யப்படுவதும், விசாரணைக்குட்படுத்தப்படுவதும். மற்றும் சந்தேகத்திற்குரியவர்கள் தடுத்து வைக்கப்படுவது குறித்தும் இங்கு ஆராயப்பட்டதாம்.

மேலும் கொழும்பு மாநகரின் சகல பகுதிகளிலும் முப்படையினருடன் இணைந்து மேற்படி தமிழ் குழுக்கள் வீதிச்சோதனையில் ஈடுபடுத்தப்பட்டுமுள்ளனர். (சி]

## இரண்டாயிரமாம் ஆண்டில் இலங்கையில் 2கோடி பேர்

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகை இந்த நூற்றாண்டு முடிவதற்குள் 2 கோடியை தாண்டிவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் பிறப்பு விகிதம் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இலங்கையின் சனத்தொகை 1 கோடியே 75 லட்சம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

### 5 அகதிமுகாம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டையில் 3 முகாம்களும் மூடப்பட்டுள்ளன.

இந்த முகாம்களில் இருந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் ஏனைய முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். மேலும் தஞ்சை மாவட்டத்திலுள்ள 23 முகாம்கள் 12ஆக குறைக்கப்படவுள்ளன. (சி)

### பிரிட்டிஷ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குச் சரியெனப் பட்டதையே செய்ததென திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரிட்டிஷ் அரசு விதித்துள்ள தடைகள் பற்றி இலங்கை அரசு பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### நெதர்லாந்து

(1ம் பக்கத்தொடர்ச்சி)

நிதியுதவியளித்ததாக தெரிவிக்கப்பட்டதையடுத்தே இக்கண்காணிப்பு போடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில்2500க்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது இயங்கி வருவதாகவும் இவற்றில் பல கண்காணிப்பிற்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கொக்குவிலில் உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம், மேஜர் சுருளியின் ஞாபகார்த்தமாக நடாத்தும் 7பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

இன்று மொத்தம் நாலு போட்டிகள் நடைபெறவுள்ளது (வி)

## பண்டத்தரிப்பில் இன்று உயிர்த்த மனிதர் கூத்து

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட முத்தமிழ் விழாவில் மேடையேற்றப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியினரின் 'உயிர்த்த மனிதர் கூத்து, நாடகம் இன்று பிற்பகல் 4-30 மணியளவில் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி அரங்கில் மேடையேற இருக்கின்றது.

முற்பகல் 10மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இருகாட்சிகளாக இடம்பெறவிருந்த இந்நாடகம் பிற்பகல் 4-30 மணிக்கு ஒரே காட்சியாக இடம்பெறும் எனவும் காலைக் காட்சிக்கென பெறப்பட்ட அன்பளிப்புச் சீட்டுக்கள் மாலை காட்சிக்கும் செல்லுபடியாகும் என விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்நாடகத்திற்கான அனுமதிச்சீட்டுக்களை பண்டத்தரிப்பு, மாதகல் பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் பிரதேச அலுவலகங்களிலும் இன்று மாலை மண்டபவாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

### வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாக ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் கூட்டுப்படை தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பால் இராணுவ தாக்குதல் உத்தி ஆவணங்கள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதையடுத்தே இப்புதிய திட்டம் தயாரிக்கப்படுகிறது.

அரசின் புதிய திட்டப்படி கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கையில் பொதுமக்களும் உடனடியாக ஈடுபடவுள்ளனராம். (சி)

### இலங்கையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகவும் திரு. ஜோன் நைட்ஸ் கூறினார்.

தென்பகுதியில் அரசபடைகளின் அட்டூழியத்தால் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதையும் இவர் அங்கு எடுத்துக் கூறியுள்ளார். வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நிறுத்தி தமிழரை காப்பாற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைஎடுக்க வேண்டுமென்றும் கூறினார். [சி)

## விம்பிள்டன்: ஸ்ரெபிகிருப் சாம்பியன்

(லண்டன்)

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன்' டெனிஸ் போட்டியின். மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் ஜேர்மன் நாட்டு வீராங்கனை ஸ்ரெபிகிருப் வெற்றி பெற்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற சாம்பியன் மோதலில், ஸ்ரேபிகிருப் உலகில் 2வது இடத்தை வகிக்கும் ஹபரியா சபட்டீனியை 6-4, 3-4. 8-6 என்ற ஆட்ட எண்ணிக்கையில் வெற்றிபெற்றார். ஸ்ரெபிகிருப் மேற்படி சாம்பியன் பட்டத்தை மூன்றுவது தடவையாக பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (வி)

## கொழும்பு - வவுனியா ரெயிலில் மோசடி

(வவுனியா)

கொழும்பு - வவுனியா ரெயிலில் மோசடிப் பேர்வழிகளின் நடவடிக்கை அதிகரித்துவருகிறது.

ரெயிலில் பயணம் செய்யும் போது நண்பர்கள் போல் நடித்து ரொபி, இனிப்புபானம் வழங்கி பிரயாணிகளை மயக்கம் அடைந்ததும் அவர்களின் உடமைகளை கொள்ளையடித்துச் செல்கிறார்கள்.

இந்த மோசடிக்காரக் கூட்டத்தினால் பல ரெயில் பிரயாணிகள் பாதிப்படைந்துள்ளனர்.

இந்த ஏமாற்றுப் பேர்வழிகளிடம் ஏமாறவேண்டாம் என்று ரெயில்வே திணைக்களம் எச்சரித்துள்ளது. (சி)

### சமாதான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவின் கொலையும், கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்பும் இதனை பின் தள்ளிவிட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேலும் அக்டோபர் மாதம் வரை இதற்கான சாத்தியம் குறைவாயிருப்பதாகவே அவை கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இனப்பிரச்னைத் தீர்வு குறித்து அண்மையில் ஜனாதிபதி குழு ஒன்றை நியமித்து பிரச்னை குறித்து ஆராயுமாறு அவர்களைக் கேட்டதாகவும் பின் குண்டுவெடிப்பு இதனைப் பிற்போட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### இந்தியா

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றால் அதிகாரிகள் உடன் விஸா வழங்குவதாகவும் கூறப்படுகிறது.

இதேபாணியைத்தான் தற்போது தமிழ்நாட்டிலும் சில வாலிபர்கள் கடைப்பிடிப்பதாகவும் சென்னையில் உள்ள இலங்கை உதவிதூதரகத்துக்கு வெளியே நின்று, விஸாவுக்குச் செல்லும், யாழ்ப்பாணத் தமிழர்களிடம் மிரட்டிப்பணம் பறிப்பதாகவும், அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றார்கள். (வி]

## வேலைத்திட்ட கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் செய்யப்பட்டு வரும் வேலைத்திட்ட வேலைகளின் கால எல்லைகள் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180385/81